பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை-28

மே.எ.எண்.2854/கே2/2020-2, நாள்.15.03.2023.

அரசாணை (3D) எண்.04. வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை, நாள்.28.02.2023 சார்பு செய்யப்படுகிறது.

திரு.அ.அப்தால் அகமது இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அதனை பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப திருநெல்வேலி மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

/ஆணையின்படி/

கண்கணிப்பாளர்.

பெறுநர்
திரு.அ.அப்தால் அகமது, இளநிலை உதவியாளர்
(திருநெல்வேலி மாவட்டப்பதிவாளர் மூலம்)

நகல்
1. மாவட்டப்பதிவாளர், திருநெல்வேலி
   (கீழ்காணும் அசல் சான்றுகளுடன்
   i) S.S.L.C. மதிப்பெண் சான்று பதிவு எண்.1071258/மார்ச் 2015
   ii) பிறப்புச் சான்று)
2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
3. முக்கிய ஆணை கோப்பு / தனி நகல் – 1.

மாவட்டப் பதிவாளர்
திருநெல்வேலி.

6 MAR 2023

<u>சுருக்கம்</u>

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பதவியில் நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.அப்தால் அகமது என்பவரது பணியினை வரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை</u>

அரசாணை (3D) எண்.04

07 MAR 2023
07843
சென்னை - 600 028

நாள்: 28.02.2023
சுபகிருது, மாசி -16,
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.2854/கே2/2020, நாள் 06.12.2021.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.2854/கே2/2020, நாள் 07.11.2022.

---------

<u>ஆணை:</u>

பதிவுத்துறையில், திருநெல்வேலி துணைப் பதிவுத்துறை அலுவலகத்தில் வைப்பறை உதவியாளராகப் பணிபுரிந்து வந்தபோது, பணிக்காலத்தினிடையே 04.02.2019 அன்று காலமான திரு.அப்துல்காதர் மஸ்தான் என்பவரின் மகன் திரு.அப்தால் அகமது என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்குமாறு 23.12.2019-ல் மனு அளித்தார். நடைமுறையிலிருந்த அரசாணைகளின்படி, அன்னாரது கோரிக்கையினைப் பரிசீலனை செய்து, திரு.அப்தால் அகமது என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயது தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.அப்தால் அகமது 08.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். திரு.அப்தால் அகமது, இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை

மாவட்டப் பதிவாளர்
திருநெல்வேலி.

வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. இந்நிலையில், பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்ட விதிமுறைகளின்படி கூர்ந்தாய்வு செய்து தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், திருநெல்வேலி பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.அப்தால் அகமது என்பவரை 08.12.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறைப்படுத்துவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் பெற உரிய விதியின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.118/ட்டி1/2023-1, நாள் 12.01.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.3934717/ஜி1/2023, நாள் 20.01.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி

அரசு செயலாளர்

பெறுநர்:

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.

✓ திரு.அப்தால் அகமது, இளநிலை உதவியாளர்,

திருநெல்வேலி பதிவு மாவட்டம். (பதிவுத்துறைத் தலைவர் மூலமாக)

<u>நகல்:</u>

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை,

சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மாவட்டப் பதிவாளர்

திருநெல்வேலி.

பிரிவு அலுவலர்